மில்களுக்காக ஒதுக்கப்பட்டது, ஆகையால் இந்தத் திட்ட உற்பத்தியை மாற்றியமைக்கஅவர்கள் ஒரு திட்டம் காணவேண்டுமென்று சொல்கிறார்கள். இதுபற்றி டெக்ஸ்டைல் கமிஷனருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாதவகையில் செய்ய வேண்டுமென்று கைத்தறி இயக்குநர் அவர்கள் வற்புறுத்தப்பட்டுள்ளார். அவர் கோவை சென்று நல்ல முடிவு எடுக்க அனுப்பப்பட்டார். அந்த வகையில் தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் எல்லா வழிவகைகளையும் காண முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுபற்றி டெக்ஸ்டைல் கமிஷனருக்கும் மத்திய அரசுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். இதற்காக இந்தச் சபையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை. இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட விஷயம். இந்த அரசு தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளும் என்று கூறி, இந்தப் பிரச்சினையை விவாதிக்கச் சபையை ஒற்றிவைக்க வேண்டியதில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மில்களை மூடிவிடப்போவதாக மில் அதிபர்கள் அறிவிப்புச் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கூறியபடி, மில் அதிபர்கள், மில்களை மூடுவதாக அறிவித்தாலும், அல்லது அப்படியே மில்களை மூடிவிட்டாலும் அது அவசரமும் அவசியமும் வாய்ந்த பிரச்சினையல்ல. இது சாதாரண அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட பிரச்சினை. ஆகவே, விதி 50, உள் விதி (8)-ன்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ii) இந்திப் படங்கள் திரையிட இயலாமையும், படப்பிடிப்பு நிலையங்கள் பிற மாநிலங்களுக்கு மாற்றமும்

THIRU K. RAMAMOORTHI: Sir, I have given notice of the following adjournment motion :—

"That the business of this House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the shifting of the A.V.M. and other studios from Madras to places outside our State, being the outcome of the non-release of Hindi films in this State."

இந்த மாநிலத்தில் இருந்து வேறு மாநிலத்திற்கு இந்த ஸ்டுடியோக்களை மாற்றுவதன் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். காரணம் நம்முடைய மாநிலத்தில் இந்திப் படங்களைத் திரையிட முடியாது இருக்கிற காரணத்தினால், சென்னையில் தயாரிக்கப்படுகிற இந்திப் படங்களை மகாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களில் திரையிடக் கூடாது என்று எடுக்கப்படுகிற நடவடிக்கையின் விளைவாக இது எழுந்துள்ளது. இதுசம்பந்தமாகச் சென்னையிலும் இந்திப் படங்களைத் திரையிட அனுமதிப்பதுபற்றி சமீபத்தில் நடத்திய பேச்சு வார்த்தையின் முடிவு என்னவாயிற்று என்று தெரியவில்லை. இன்றைக்கு ஏறக்குறைய 15 இந்திப் படப்பிடிப்பில் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. எட்டாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன, மத்திய அரசையோ அல்லது மகாராஷ்டிரா போன்ற மாநில அரசுகளையோ அணுகி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா, தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள இந்த முக்கியமான, அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எப்படித் தீர்க்கப்படும் என்பதுபற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக்காட்டிய பிரச்சினையைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க முனைந்திருக்கிறது இந்த நேரத்தில் இந்த அவையை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க

வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பிரச்சினை சர்க்கார் கவனத்தில் இருக்கிறது. எந்த முறையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றிச் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு ராம மூர்த்தி கொண்டுவந்துள்ள பிரச்சினை ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட காரியம் அல்ல. நிகழ்ந்து விடுமோ என்று அச்சப்படுவதான ஒன்று. நம்முடைய விதி 50 (3)-இன்படி,

"The motion must be restricted to a specific matter of recent occurrence."

எனவே இது நிகழ்ந்துவிட்ட காரியமாக இல்லையாதலால் இது ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உரியதல்ல என்று தீர்ப்புச்சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

(iii) கோவை, ஈரோடு நகரங்களில் 'தமிழர் படை'யின் நடவடிக்கைகள்

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஐயா, சட்டப்பேரவை 42-வது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்கச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி ஓர் அறிவிக்கையைக் கொடுத்துள்ளேன்:—

"ஈரோடு, கோவை ஆகிய நகரங்களில் தமிழர் படை (ஈரோடு) என்கிற பெயரால் "தனித் தமிழ்நாடு காண்போம் வாரீர்", "இந்தியனே வெளியேறு", "தமிழ்நாடு தமிழருக்கே" என்கிற கோஷங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு நாட்டின் ஐக்கியத்துக்கே ஏற்பட்டிருக்கும் ஆபத்துப் பற்றி விவாதிக்க வேண்டும். தலைவர் அவர்களே, இது எப்படி பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்க ஆசைப்படுகிறேன். கோவையில், ஈரோட்டில் தனித் தமிழ்நாடு இயக்கம் நடந்தது, தமிழ் நாட்டுக் கொடி என்று ஏற்றப்பட்டது. நாம் எல்லாம் தேசத்தின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதாகப் பிரமாணம் எடுத்துக்கொண்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் தேச ஐக்கியத்தையே பெரும் அளவில் கெடுக்கக்கூடிய அளவில் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னால் வெளிநாட்டுத் தூண்டுதல் சக்திகூட இருக்கிறதென்று நினைக்கிறேன். இதைவிட வேறு பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் எதுவும் இருக்க முடியாது. ஆகவே இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்."

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதுகுறித்துப் போலீஸ் இலாக்காவினர் தகவல்கள் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். நாட்டின் ஐக்கியத்தைக் கெடுக்கும்படியான எந்தக் காரியத்தையும் இந்தச் சர்க்கார் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. அன்றாட நடைமுறையை ஒட்டித்தகுந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட காரியம் அரசின் சாதாரண நிர்வாகத்துக்கு மிஞ்சிய காரியமாகக் கருத முடியாததால் இதற்கு அனுமதி மறுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

கடம்புலியூர் உள் வட்டத்தில் பருவமழையின்மையும், மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு வழங்கிய கடன் வசூல் ஒற்றிவைப்பும்

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ், தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டித் தொகுதியில் கடம்புலியூர் உள் வட்டத்தில் மண் அரிப்புத் திட்டத்தின்கீழ் கட்டிய அணைகளுக்கான